# யார் எவர்

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற
இலங்கைக் கிளை

...ிப்பிராந்திய தமிழாராய்ச்சி மகாநாடு
27, 28, 29 மே 1983

920
920
இளந

920
இலங்

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளை

# தலைவர்

**வித்தியானந்தன், சுப்பிரமணியம்.** எம். ஏ., பிஎச். டி. பிறந்த நாள் 8-5-1924. தமிழ்ப் பேராசிரியர்; துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். வெளியீடுகள்: இலக்கியத் தென்றல், தமிழர் சால்பு, கலையும் பண்பும், மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள், அலங்கார ரூபன் நாடகம், எண்டிறிக்கு எம்பரதோர் நாடகம், கஞ்சன் அம்மானை, தமிழியற் சிந்தனைகள். பல ஆராய்ச்சிச் சஞ்சிகைகளுக்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். கோலாலம்பூர், சென்னை, பாரிஸ், மதுரை ஆகிய இடங்களில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகா நாடுகளிற் பங்குபற்றியவர். நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாகாநாட்டை யாழ்ப்பாணத்திலே நடத்தியவர். மகாநாட்டிலே, 'மன்னார் நாட்டுப் பாடல்களும் முல்லைத்தீவு நாட்டுப் பாடல்களும்—ஒப்பாய்வு' என்னும் கட்டுரையைப் படிக்கின்றார்.



# துணைத்தலைவர்கள்

**அம்பிகைபாகன் ச.** பி. ஏ. பிறந்த நாள் 3-5-1908, இளைப்பாறிய அதிபர், வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம். வெளியீடுகள்: யோகசுவாமிகள் வாழ்க்கையும் பணியும், இலங்கைத் தமிழிலக்கிய வரலாற்றிற் குறிப்பிடத்தக்க அம்சங்கள், சுன்னாகம் செல்லாச்சி அம்மையார் நினைவு மலர், இலக்கணம் முத்துக் குமாரத்தம்பிரானார் நினைவு மலர், ஆனந்தக்குமாரசாமி பற்றிய நூல். பாரதியாரும்யாழ்ப்பாணச் சுவாமிகளும் பற்றித் தொடர் கட்டுரைகள் எழுதியுள்ளரர். மதுரையில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநாட்டில் 'ஈழநாடும் தமிழ்ச்சங்கங்களும்' என்னும் கட்டுரையைப் படித்தவர்.



**இரத்தினம், கார்த்திகேசர் பொன்னம்பலம்** பி. ஏ. (சிறப்பு) எம். ஏ, பி. ஓ. எல்., பிறப்பு *10-03-1914* இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் (*1965* தொடக்கம் இன்றுவரை): முன்னைநாள் விரிவுரையாளர், இலங்கை அரசினர் ஆசிரியர் கல்லூரி. முன்னைநாள் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர் அரச கருமமொழித் திணைக்களம், கொழும்பு, முன்னைநாள் விரிவுரையாளர், இந்திய கலைப்பகுதி, மலேசியப் பல்கலைக் கழகம். எழுதிய நூல்கள்: தமிழ் மறை விருந்து, பச்சை மண்ணும் சுட்ட மண்ணும், தாவரம் இல்லை, இலங்கையின் இன்பத் தமிழ், இலக்கியம் கற்பித்தல், நூற்றாண்டுகளில் தமிழ், அடிமைச் சாசனம், மனப்பால், தனி ஆட்சி, தடுப்புக் காவலிற் பத்து நாட்கள். பதிப்பித்த நூல்கள்: நாவலர் நினைவு மலர், திருவள்ளுவர் திருநாள் மலர், முருகு, தமிழ் மறைக் கட்டுரைகள், எழுத்தாளர் கல்கி. தலைவர், தமிழ் மறைக் கழகம்.



**உவைஸ், மகுமது முகம்மது,** எம். ஏ., பிஎச். டி. ஹெனமுல்லை பானன்துறை. பிறப்பு *18-01-1922* பேராசிரியர், இஸ்லாமியத் தமிழ் இலக்கியம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை. எழுதிய நூல்கள் *31*க்கு மேற்பட்டவை. அவற்றுட்சில, முஸ்லிம்களின் தமிழ்த்தொண்டு (ஆங்கிலம்), இஸ்லாமியத் தென்றல், நம்பிக்கை, ஞானவள்ளல் குணங்குடியார், நீதியும் நியாயமும், இஸ்லாமிய இலக்கியத்தில் திருச்சித் திருப்பம், இஸ்லாமும் இன்பத்தமிழும், அறபுச் சொல்லகராதி, இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு—முதலாம் தொகுதி, நம்பிக்கையும் நடைமுறையும் (கவிதை), நபிகள்நாயகம் (சிங்களம்) தித்திக்கும் திருமறை (சிங்களம்) கிராமப்பிறழ்வு (தமிழ்) இஸ்லாமிய வரலாற்று நிகழ்ச்சிகள்: தொகுதிகள் 1, 2, 3 (சிங்களம்), தமிழ் இலக்கியத்தில் முஸ்லிம் காப்பியங்கள்



(ஆங்கிலம்) பதிப்பித்த நூல்கள்: புலவராற்றுப்படை, புது குஷஷாம் ஆசாரக் கோவை முதலியன. தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆராச்ய்சிக் கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

# இணைச் செயலாளர்கள்

**ரத்தினம், ஜேம்ஸ் தேவதாசன்.** பிறந்த நாள் 13-06-1905 முன்னாள் அதிபர், புனித சேவியர் கல்லூரி. பிரபல இறக்குமதி ஏற்றுமதி வர்த்தகர், ஆராய்ச்சியாளர். இவரது ஆராய்ச்சிகளை அங்கீகரித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்குக் கௌரவ இலக்கிய கலாநிதிப்பட்டம் வழங்கியது. ஐக்கிய நாடுகள் அமெரிக்கா, சோவியத் ஒன்றியம், சீனு உட்படப் பல உலக நாடுகளின் பல்கலைக்கழகங்களுக்கு விஜயம் செய்துள்ளார். ஈவ்லின் ரத்தினம் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஸ்தாபகர். யாழ்ப்பாணம் பல்கலைக் கழக ஆளுநர் சபை உறுப்பினர்.



**துரைராஜா, வீ. எஸ்.** A. A. Dipl (Lond) F.R.I.B·A., F.C.I.A., F.I.I.A., A.R.A.I.A. Dip. Trop. Arch. F. Inst Arb (Lond) வயது 53. பட்டயம் பெற்ற கட்டிடக்கலைஞர். உரிமையாளர், துரைராஜா அசோசியேட்ஸ். ஆசிரியர், இலங்கையிற் கட்டிடக் கலையும் கலைகளும். அனைத்துலக நகரத் திட்டவமைப்பு மகாநாட்டில் ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பித்தவர்— இலண்டன், பாரிஸ் ஜெனிவா இந்தியா நாடுகளில் நடைபெற்ற வீடமைப்பு கட்டிடக்கலை பற்றிய அனைத்துலக மகாநாடுகளிற் பங்குபற்றியவர்.



**சச்சிதானந்தன், கணபதிப்பிள்ளை.** எம். எஸ். சி. வயது 41



முன்னாள் ஆய்வு அலுவலர், கடற்றொழில் ஆராய்ச்சி நிலையம், கொழும்பு. முன்னாள் விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம். மறவன் புலோவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இப்போது தவாகியைச் சார்ந்த ஏடனில் ஐக்கியநாடுகள் உணவு விவசாய வளர்ச்சித்திட்ட ஆலோசகராகப் பணியாற்றுகின்றார்.

## இணைப் பொருளாளர்கள்



**அரசரத்தினம், இ.** அரஸ்கோ தொழிலகங்களின் அதிபர். முத்தமிழ் வெளியீட்டுக் கழகப் பொருளாளர், வட இலங்கைத் தொழிலதிபர்கள் சங்கத் தலைவர். பல அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடுகளிற் கலந்து கொண்டவர். சிவக் கருவூலர் என்ற பட்டம் பெற்றவர்.



**நமசிவாயம், ஆர்.** சட்டத்தரணி. பாவலர் சரித்திரம் வெளியீட்டுக்குழு உறுப்பினர். திருக்கேதீஸ்வர ஆலயப் புனருத்தாரணச் சபை இயக்குநர். கொழும்புத் தமிழ்ச் சங்க இணைப்பொருளாளர்.


# மகாநாட்டுப் பேராளர்

**அருமைநாயகம்,** இ. B. Sc. (Eng.) M.I.E.C. (Eng.) M. I. C. E.) பொறியியலாளர், 'முல்லைத்தீவு மாவட்டத்தில் நீர்ப்பாசனம்' என்னும் பொருள்பற்றிக் கட்டுரை படிக்கின்றார்.



**இந்திரபாலா, கார்த்திகேசு,** B. A. Hons. Ph. D. பிறப்பு 22-10-1937 இலங்கைப் பல்கலைக்கழகத்தில் 1960 தொடக்கம் விரிவுரையாளராகக் கடமையாற்றி 1975 இல் யாழ்ப்பாண வளாகத்தில் வரலாற்றுப் பேராசிரியராகக் கடமை ஏற்றார். தற்பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கலைப் பீடாதிபதியாகக் கடமையாற்றுகின்றார். 'இலங்கையின் வன்னிப் பிரதேசத்துத் தமிழ்ச் சாசனங்கள்' என்னும் கட்டுரை படிக்கின்றார்.

**இரகுபதி பொன்னம்பலம்,** பிறப்பு 23-10-1956 மைசூர்ப் பல்கலைக்கழகத்தில் B. A. பட்டத்தைச் சிறப்புத் தகைமையுடன் முதல் வகுப்பில், வரலாற்றுக்கான தங்கப்பதக்கத்துடன் பெற்றவர். மைசூர்ப் பல்கலைக்கழகத்திற் புராதன வரலாறும் தொல்லியலும் துறையில் முதலாம்வகுப்பில் முதலாம் நிலையில் எம். ஏ. பட்டம் பெற்றவர், மைசூர்ப் பல்கலைக்கழகத்தில் சாசனப் பட்டப் பிற்கற்கை நெறித்தகைமை பெற்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கலைக்கழக வரலாற்றுத் துறையிலே தொல்லியிற்கான துணை விரிவுரையாளர். யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் வன்னியிலும் தொல்லியல் மேலாய்வுகளை மேற்கொண்டார்; ஆனைக் கோட்டை பெருங்கற் பண்பாட்



டுத் தல அகழ்லாய்வாளர். மாந்தை 1982 அகழ்வாய்வில் பங்கு கொண்டுள்ளார். 'Archaelogical evidences of two mayor routes that linked Vanni with Jaffna' என்னும் கட்டுரை படிக்கின்ருர்.

**கனகரத்தினம், வைத்திலிங்கம்.** எம். ஏ. வயது 35 விரிவுரையாளர், இந்துப் பண்பாட்டுத்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்: பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் கட்டுரைகள் எழுதியுள்ளார். 'வன்னி வளநாட்டில் விவசாயச் சடங்குமுறை', 'வன்னி வளநாட்டில் நாச்சிமார் வழிபாடு' என்னும் கட்டுரைகள் படிக்கின்ருர்.




**குணலட்சுமி சிவசுந்தரம், திருமதி.** B. A. Hons தமிழ். புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பிறந்த நாள் 16-4-1955 'வன்னிப் பகுதியின் நாட்டார் வழக்கியல்' என்னும் ஆய்வுக் கட்டுரையை யாழ். பல்கலைக் கழகத்திற் சமர்ப்பித்தவர். எழுத்துத் துறையில் மிகுந்த ஆர்வமுடையவர். 'வன்னிப் பிரதேச ஐதீகங்களும் காரணிகளும். 'வன்னிப் பிரதேசத்தின் பொருளாதார முயற்சிகளும் அவை பற்றிய நாட்டார் வழக்காறுகளும்' என்னும் கட்டுரைகள் படிக்கின்ருர்.



**சண்முகலிங்கன், நாகலிங்கம்.** கொழும்புப் பல்கலைக்கழகச் சிறப்புக் கல்விப் பட்டதாரி. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகச் சமூகவியற்றுறை உதவி விரிவுரையாளர். பல்கலைக் கழக மட்டத்திற் பல சமூகவியல் ஆய்வுகளில் ஈடுபட்டவர். பட்டப்படிப்பின் பின் சிறிது காலம் மார்க்க ஆராய்ச்சி நிறுவனத்திலே தொடர்புச் சாதன ஆராய்ச்சிப் பிரிவிற் கடமையாற்றியவர்—ஆக்க இலக்கியங்களிலும் கலைத்துறையிலும் சிறப்பான ஈடுபாடு கொண்டவர். எழுத்தாளர், கவிஞர், இசைக் கலைஞர் 'மரபு வழி முல்லை மண்ணில் முதுமைப் பருவம்' என்னும் கட்டுரை படிக்கின்றார்.



**சண்முகசுந்தரம், தப்பு.** B. A., Dip. in Ed. வயது 58 இரண்டு முறை இலங்கைச் சாகத்திய மண்டலப் பரிசில் பெற்றவர். எழுதிய நூல்களிற் பதினைந்து அச்சில் வந்துள்ளன. வரலாற்று நூல்கள் 3; கலை மரபு பற்றியவை3; நாட்டார் இலக்கியம் 6; வாழ்க்கை வரலாறு2. இவற்றைத்தவிர 25 சிறுகதைகளும் 2 நாவல்களும், 2 நாடகங்களும் நூற்றுக்கணக்கான கட்டுரைகளும் பத்திரிகைகளில் எழுதியுள்ளார்.



கடந்த 31 ஆண்டுகளாக ஆசிரியர் தொழிலில் ஈடுபட்டுள்ள இவர், பல கல்லூரிகளில் உதவி அதிபராகவும் கடமையாற்றியுள்ளார்.


இலங்கைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் ஏடாகிய 'இளங்கதிரின்' முதல் ஆசிரியர், 'வன்னி நாயச்சிமார் மான்மியம்', 'குருநாதர் மான்மியம்', 'குருவிச்சியார் புலம்பல்' ஆகிய வன்னியியல் நாட்டார்

இலக்கிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். தமிழ்க் கதைஞர் வட்டம்—தகவம்—நிறுவனத்தின் காப்பாளர், 'வன்னி நச்சிமார் மான்மியம்—ஓர் ஆய்வு' என்னும் கட்டுரை படிக்கின்றார்.

**சிவசாமி, விநாயகமூர்த்தி.** B. A. (Hons) Lond. B. A., M. A., (Cey.) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமஸ்கிருதத்துறைத் தலைவர். 'திராவிடர் ஆதிவரலாறும் பண்பாடும்', 'ஆரியர் ஆதிவரலாறும் பண்பாடும்' என்னும் இரு நூல்களின் ஆசிரியர். தமிழியல், சமஸ்கிருதம், தென் ஆசியவரலாறு, இந்துசமயம், தொல் பொருளியல், நுண்கலைகள் பற்றிப் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். தற்பொழுது 'நாட்டியசாஸ்திரமரபு' என்னும் பொருள்பற்றிய ஆய்வில் ஈடுபட்டுள்ளார். 'வன்னிப் பிரதேசத்துச் சிற்பங்கள்' என்னும் பொருள் பற்றிக் கட்டுரை படிக்கின்றார்.



**சிவப்பிரகாசம், வைத்தியலிங்கம், கார்த்திகேசபிள்ளை.** பி. ஏ. (சிறப்பு தமிழ்) எம். ஏ. (கல்வி) எம். ஏ. (தமிழ்) கல்வி டிப்புளோமா. பிறப்பு 25-12-1933 முதலாந்தர விரிவுரையாளர், ஆசிரியர் கல்லூரி, கோப்பாய். ஆக்கங்கள்: கல்விச் சிந்தனைத் துறையிற் சேர் பொன் அருணசலத்தின் பங்களிப்பு, விபுலானந்தரின் கல்விச் சிந்தனைகள் (அச்சில்). தமிழிலும் ஆங்கிலத்திலும் ஐம்பதுக்கு மேற்பட்ட கட்டுரைகள் எழுதியுள்ளார். கோலாலம்பூர், சென்னை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மதுரை ஆகியஇடங்களில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநாடுகளிற் பேராளராகப் பங்குபற்றியவர். 'சிலப்பதிகாரமும் சிலம்பு கூறலும்—ஒப்பீடு' என்னும் கட்டுரை படிக்கின்றார்.



**சிற்றம்பலம், சி. க.** கலாநிதி. தொல்லியல் எம். ஏ., பிஎச். டி. பட்டங்களைப் பெற்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாறுத் துறை விரிவுரையாளர்; தொல்லியலாளர். 'பெருங்கற்கால இலங்கை' என்ற பொருளில் ஆய்வை மேற்கொண்டு இந்நாட்டின் ஆதிகால நாகரிகத்துக்கு வித்திட்டவர்கள் திராவிடமொழி பேசியவர்களே எனவும் நிறுவியுள்ளார். சமயம், வரலாறு, தொல்லியல் ஆகிய துறைகளிற் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இவர் தமிழில் எழுதிய 'பண்டைய தமிழகம்' விரைவில் வெளிவர இருக்கின்றது. இவரது அண்மைக் கால ஆய்வுகளில் யாழ் மாவட்டம் பற்றிய தொல்லியல் ஆய்வு குறிப்பிடத்தக்கது. 'வன்னியும் தொல்லியல் ஆய்வும்' என்னும் கட்டுரை படிக்கின்றார்.



**சுப்பிரமணியம், நாகராஜ ஐயர்.** எம். ஏ. கலைமகள் நிலையம் முள்ளியவளை. பிறப்பு 25-12-1942. யர்ழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர். இலங்கைப் பிரதேச அபிவிருத்தியமைச்சின் தமிழிலக்கிய மதியுரைக் குழுவின் துணைத்தலைவர். பல இலக்கிய வட்டங்களின் தலைவர். இலக்கிய மன்றங்களின் புரவலர். 'ஈழத்துத் தமிழ் நாவலிலக்கியம்' என்னும் நூலின் ஆசிரியர். நான்காவது தமிழாராய்ச்சி மகாநாட்டிலும், அனைத்துலக இந்து மகாநாட்டிலும் பங்குபங்றி ஆய்வுக் கட்டுரைகள் படித்தவர். தங்கப் பதக்கம் பெற்ற கவிஞர். 'வித்தியா பூஷணம்' என்ற பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டவர். 'வன்னிப் பிரதேசத்தில் நவீன தமிழிலக்கியம்' என்ற கட்டுரைபடிக்கின்றார்.



**சுப்பிரமணியம், வேலுப்பிள்ளை. புனைபெயர் முல்லைமணி** (B. A. Hons.). பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர் தராதரப் பத்திரம். பிறந்த நாள் 3-5-1933. கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர், கலைஞர் திலகம் என்ற கௌரவப் பட்டம் பெற்றவர். கலைக்கழக சாகித்திய மண்டலப் பரிசுகளும் பெற்றவர். வெளியிட்ட நூல்கள்: பண்டாரவன்னியன், அரசிகள் அழுவதில்லை, ஒட்டு சுட்டான் தான்தோன்றி ஈசுவரன் பாமாலை, நெடுங்கேணி வில்வையடிப் பிள்ளையார் பாமாலை; காவத்தை நிலகாமம் ஸ்ரீ முத்துமாரியம்மன் திருவூஞ்சல், தமிழ் மொழிப் பயிற்சி. சிறுகதை நாவல், கவிதை, நாடகம், இலக்கிய விமர்சனம் ஆகிய துறைகளில் ஈடுபாடுடையவர். 'வன்னிப் பிரதேசத்தின் பெருந் தெய்வ வழிபாடு', 'வன்னிப்பிரதேசத்திற் சிறு தெய்வ வழிபாடு' என்னும் கட்டுரைகள் படிக்கின்றார்.






**செல்வரத்தினம், நாகரத்தினம்.** (B. A. Hons.) பிறப்பு 15-11-1953. பிறப்பிடம் பருத்தித்துறைத் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த சுண்டிக்குளம். வாழ்விடம் அம்பலவன் பொக்கனை, முல்லைத்தீவு. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பட்டதாரி. பல பொதுநல சேவைகளில் ஈடுபாடுடையவர். இலங்கைக் குடும்பத் திட்டச் சங்க அம்பலவன் பொக்கனைத்திட்டப் பிரதேசத் தலைவர். முல்லைக் கலைஞர் ஒன்றியச் செயற்குழு உறுப்பினர்,

தமிழரசி. சந்திரசேகரி. B. A. (Hons.). முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத்துறையிற் சிறப்புப் பட்டம் பெற்றவர். முதுமாணிப் பட்டத்திற்கு இலங்கை மக்களின் கிராமியத் தெய்வ வழிபாடு பற்றி ஆராய்ச்சி செய்கின்றார். யாழ்ப்பல்கலைக் கழகப் பெண்கள் விடுதித் துணைத்தலைவர். 'வன்னிப்பிரதேச இந்துக் கிராமிய வழிபாடு—வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களைக் கருத்திற் கொண்ட ஆய்வு' என்னும் கட்டுரை படிக்கின்றார்.





தர்மலிங்கம், கணபதிப்பிள்ளை B. A. (Hons.) பிறப்பு 18-5-1955. பெரும்பாக உத்தியோகத்தர், சமநல சேவைகள் திணைக்களம், முல்லைத்தீவு. அறிவு என்ற பெயரிற் காலாண்டுச் சஞ்சிகை வெளியிட்டவர், பல மலர்களுக்கும் சஞ்சிகைகளுக்கும் கட்டுரைகள் எழுதியுள்ளார். 'வன்னிப் பிரதேச நிலவுடைமை' என்ற கட்டுரை படிக்கின்றார்.



**தேவரஞ்சிதம், நாகலிங்கம்,** B. A. (Hons.) யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம். வயது 26. உதவி விரிவுரையாளர், புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். 'கரைத்துறைப் பற்றில் நீர்ப்பயன்பாடும் பயிர்ச் செய்கைப் பிரச்சினைகளும்' என்னும் கட்டுரை படிக்கின்றார்.


**நவசோதி, கணபதிப்பிள்ளை** எம். ஏ., உதவிச் சுவடிக் காப்பாளர்; பிறந்த நாள் 2-04-1941. வெளியீடுகள்: கதைப் பூங்கா, ஓடிப்போனவன், நாட்டுப் பாடலில் மலையக வரலாறு, பல்லவர் காலமும் பக்திக் கோலமும், இலக்கிய மகளிர் இதய வேட்கை. சென்னையிலும், யாழ்ப்பாணத்திலும் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாடுகளிலும், காயல்பட்டினத்திலும், கொழும்பிலும் நடைபெற்ற இசுலாமியத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளிலும் ஆய்வுரை நிகழ்த்தியவர். மலாயா, கேரளபல்கலைக்கழகங்களில் நடைபெற்ற தமிழ், மொழியியல் ஆய்வரங்குகளுக்கு ஆய்வுகள் சமர்ப்பித்தவர். ஈழத்தை விட தமிழ் நாட்டுத் 'தாமரை' 'ஆராய்ச்சி' மலேசிய 'தமிழ் நேசன்' இதழ்களில் ஆய்வுகள் வெளிவந்துள்ளன. சிங்களக் கவிதைகளை தமிழில் மொழி பெயர்த்துள்ளார். 'மன்னார் முசுலிம்கள் மத்தியில் நிலவும் நாட்டுப் பாடல்கள்', 'வன்னியூர்க் கவிராயரின் கவிதைப் பண்புகள்' ஆகிய கட்டுரைகள் படிக்கின்றார்.





EVELYN RUTNAM LIBRARY
336

**பஸ்தியாம்பிள்ளை, பேட்றம், E. S. J** பி. ஏ. (இலங்கை), எம். ஏ. (லண்டன்) பிஎச். டி. (இலங்கை). பிறந்த நாள் 26-8-1930. வரலாற்றுத்துறை இணைப் பேராசிரியர். கலைப்பீடாதிபதி, கொழும்புப் பல்கலைக்கழகம். வெளியீடுகள்: இலங்கை கவர்னர் சேர் கிறெகறியின் நிருவாகம். பல ஆராய்ச்சிக்கட்டுரைகளும். 1962 இல் றோயல் பொது நலநாட்டுச் சங்கம் இவர் எழுதிய கட்டுரைக்கு வோல்டர் ஃபிறீவென் பிரிவு பரிசினை அளித்துள்ளது. மலேசியா, சென்னை, யாழ்ப்பாணம், மதுரை ஆகிய இடங்களில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடுகளிற் கட்டுரைகள் படித்தவர் 'Agriculture in the Vanni (Sri Lanka) during the early period of the 19th Century' என்னும் கட்டுரை படிக்கின்றார்.



**பத்மநாதன், சிவசுப்பிரமணியம்** B. A. Hons (Cey.) Ph. D. (London). பிறந்த திகதி 20-3-1940. இணைப்பேராசிரியர், வரலாற்றுத் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம். நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு அமைப்புக்குழு உறுப்பினராகவும் பொருட்காட்சிக் குழுத் தலைவராகவும் பணியாற்றியவர். அனைத்துலக தமிழாராய்ச்சி நிறுவனஇலங்கைக்கிளையின் பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர் (1973–1983). பேராதனைப் பல்கலைக்கழக ஆசிய ஆராய்ச்சிக்கழகப் பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர். யாழ்ப்பாண இராச்சியம், பாகம் I (ஆங்கிலம், 1978), வன்னியர் (1970) என்ற நூல்களின் ஆசிரியர். அரசியல் சமுதாய வரலாறு, அரசறிவியல், சாசனவியல், இந்து கலாசாரம் ஆகிய துறைகளில் ஏறக்குறைய 50 ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். நாலாம், ஐந்தாம் அனைத்



துலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளிலும் உலக இந்து மாநாட்டிலும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார். இம்மாநாட்டிற்கு 'அடங்காப்பற்று வன்னிமைகள் 1720—1760', 'கயிலை வன்னியனார் தர்மசாதனப் பட்டையம்: சில வரலாற்றுக் குறிப்புக்கள்' என்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

**பார்வதி, கந்தசாமி.** பி. ஏ., பிஎச். டி. வன்னி வளநாட்டின் குமுளமுனையில் 10-04-1949ல் பிறந்தவர். அவுஸ்திரேலிய மொனாஸ் பல்கலைக்கழகப் புலமைப் பரிசிலைப் பெற்று 1976—1980 வரை கலாநிதிப்பட்டத்திற்கான ஆய்வை மேற்கொண்டார். 1980ல் 'யாழ்ப்பாண ஆங்கிலம்' பற்றிய ஆய்வுக்கான கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழி பண்பாட்டுத் துறை விரிவுரையாளர். 1982ல் 'நாம் பேசும் ஆங்கிலம்' என்ற சிறுநூலை வெளியிட்டார். மொழி, இலக்கியம், நாட்டார் பண்பாட்டியற்றுறைகளில் ஈடுபாடுடையவர். 'வன்னி நாட்டும் பழமொழிகளும் மரபு வழக்குகளும் காட்டும் பண்பாடு 'என்னும் கட்டுரை படிக்கின்றார்.





**பாலசுந்தரம், இளையதம்பி.** பி.ஏ.(சிறப்பு) பிஎச்.டி(இலங்கை) பிறப்பு 5-9-1945 விரிவுரையாளர், தமிழ்த்துறை, கொழும்புப் பல்கலைக்கழகம். வெளியிட்ட நூல்: ஈழத்து நாட்டார் பாடல்கள் ஆய்வும் மதிப்பீடும், மட்டக்களப்பு மாவட்டம். தமிழர் பண்பாடு, தமிழிலக்கியம் ஆகிய துறைகளிற் பல ஆய்வுக் கட்டுரைகள்வெளியிட்டுள்ளார். 'ஈழத்திற் கண்ணகிவழிபாடு பற்றிய ஆய்வில் வன்னிப்பிரதேச நாட்டார் பாடல்கள்' என்னும் கட்டுரை படிக்கின்றார்.

**பாலசுந்தரம்பிள்ளை, பொன்னுத்துரை.** B. A. (Hons) இலங்கை, பிஎச். டி. (டரம்). பிறப்பு 29-4-1941. பேராசிரியர், துறைத்தலைவர் புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். ஆங்கிலத்திலும் தமிழிலும் பல புவியியல் ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். 'வன்னிப் பிரதேசத்தின் குடிசனத்தொகை வளர்ச்சியும் பரம்பல் மாற்றங்களும்', 'வன்னிப்பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சியில் மத்திய இடங்களின் பங்கு' என்னும் கட்டுரைகளைப் படிக்கின்றார்.



**பூலோகசிங்கம், பொன்னையா.** பீ.ஏ. (சிறப்பு), டி.பில். (ஒக்ஸன்) 37, 32ஆம் ஒழுங்கை, கொழும்பு-6. வயது 44. சிரேட்ட தமிழ் விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம். வெளியீடுகள்: நூல்கள்: 'தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞர் பெருமுயற்சிகள்', பதிப்பு ஜே. ஆர், ஆணல்ட் அவர்களின் 'பாவலர் சரித்திர தீபகம்', ஆராய்ச்சிக் குறிப்புகளுடன், ஆய்வுக் கட்டுரைகள் ஈழத்து இயக்கியவரலாறு, தமிழ் இலக்கியவரலாறு, இலக்கிய வடிவங்கள், முதலியன, அனைத்துலகத் தமிழ் ஆரபய்ச்சி மன்ற (இலங்கைக்கிளை) நிர்வாக சபை அங்கத்தவர், 'வையாபாடல்' 'கதிரை மலைப்பள்ளு' என்னும் இரு கட்டுரைகளை மாநாட்டில் வாசிக்கிறார்.



**மார்க்கண்டு, சின்னப்பு தம்பையா.** *பிறந்த நாள் 09-07-1940 பிறப்பிடம், நொச்சிக்குளம், ஓமந்தை கிழக்கு, ஓமந்தை. பேராதனைப்*



*பல்கலைக்கழகத்திற் பணம் வங்கித் தொழிலைப் பிரதான பாடமாகக் கொண்டு பொருளியற்றுறையிற் சிறப்புப் பட்டதாரிப் பட்டம் பெற்றவர். இலங்கை நிருவாக சேவையிற் பல பிரதேசங்களிற் கடமையாற்றியவர். 1981ம் ஆண்டுமுதல் யாழ்பாவட்ட உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளராகக் கடமையாற்றுகின்றார். கட்டுரையாசிரியர், வடமாராட்சிப் பிரதேச முத்தமிழ்ச் சங்கப் போஷகர். 'வன்னியின்சில பண்டைய சிவாலய வழிபாட்டுத் தலங்கள்' என்னும் கட்டுரை படிக்கின்றார்.*

**மெற்றாஸ்மயில், செல்லையா.** B. A. Hons. *பிறப்பு 29-4-1945 புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர் பேரா*



*தனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி மாணவனாகத் தோற்றி, புவியியற் பாடத்தினில் பீ. ஏ, சிறப்புப் பட்டத்தினை பெற்றார். சிரேஷ்ட எழுதுவினைஞராகிய இவர் யா/கல்வித்திணைக்களத்திலே தமது கடமையாற்றுவதுடன், தொழிற்சங்கவாதியாகவும், பொதுச் சேவையாளராகவும் பணிபுரிந்து வருகிறார். அத்துடன் தமிழ் வரலாறு, புவியியல், கல்வி ஆய்வுகளையும் மேற் கொண்டுள்ளார். 1980ம் ஆண்டு வன்னிநாட்டுப்பாடல்களைத் தொகுத்து 'வன்னி வள நாட்டுப்பாடல்' நூலினை வெளியிட்டுள்ளார். 'வவுனியா— முல்லைத்தீவு மாவட்டங்களில் 60க்குமுன் கல்விநிலை' வவுனியா— முல்லைத்தீவு மாவட்டங்களில் 60க்குப்பின் கல்விநிலை' என்னும் கட்டுரைகள் படிக்கின்றார்.*

**விசாகலிங்கம், இராமலிங்கம்.** B. Ed. (Hons.) M. Phil. கணுக் கேணி முள்ளியவளையைச் சேர்ந்தவர். இலங்கைக் கல்விச்சேவை உத்தியோகத்தர் (பதிப்பாசிரியர்) கல்வி வெளியீட்டுத் திணைக்களம் கொழும்பு. இலங்கைத் தேசியக் கல்விக் கழகத்திற் 'கல்வி' சஞ்சிகை உட்பட ஏனையபல சஞ்சிகைகளிற் கல்வி, உளவியல், கல்வித் தத்துவம் தொடர்பான கட்டுரைகளும், ஆய்வுக்கட்டுரைகளும், மரபுவழிக் கவிதைகளும் வெளியிடப்பட்டுள்ளன. 'வன்னிப் பிரதேசக் கல்வி வளர்ச்சியும் இலக்கிய வளர்ச்சியும்' என்னும் கட்டுரை படிக்கின்றார்.



**வித்தியானந்தன் சுப்பிரமணியம்**

(விபரங்களுககு முதலாம் பக்கம் பார்க்க)

**வேலுப்பிள்ளை, ஆள்வாப்பிள்ளை.** Ph. D. (Cey) D. Phil. (Oxon) வயது 46. இணைப் பேராசிரியர், பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத்தலைவர். திராவிட மொழியியற் கழகத்தின் சிரேஷ்ட ஆராய்ச்சியாளர் விருது பெற்ற ஒரே இலங்கையர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முதவாவது Visiting. பேராசிரியர் இயற்றிய நூல்கள் :- தமிழ் நூல்கள்: தமிழ் வரலாற்றிலக்கணம், தமிழிலக்கியத்திற் காலமும் கருத்தும், சாசனமும் தமிழும், தமிழர் சமய வரலாறு. ஆங்கில நூல்கள்: Ceylon Tamil Inscriptions, Pandya Inscriptions—a Language Study, A Study of the Dialects in Inscriptional Tamil, Epigraphical Evidences for Tamil Studies. Journal



of Tamil Studies என்ற சஞ்சிகையிற் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். 'வன்னிப் பிராமிச் சாசனங்கள்'—சில கருத்துக்கள் என்னும் கட்டுரை படிக்கின்றார்,

**சிங்கரத்தினம். பொ.** B. A. Hons, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, 'முல்லைத்தீவின் பட்டினவாக்கம்' என்னும் பொருள்பற்றிக் கட்டுரை படிக்கின்றார்.

# வன்னிப்பிராந்திய மகாநாட்டின் அமைப்புக்குழு தலைவர்




**கார்த்திப்பிள்ளை கனக சபை ஞானச்சந்திரன்**
*பிறந்த நாள் 16-7-1930. சட்டத்தரணி. முன்னாள் நீதிமன்ற நீதிபதி. முன்னாள் அரசாங்க வழக்குரைஞர். சட்டவாக்கக் குழுவின் முன்னாள் உறுப்பினர். முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர். முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திச்சபை செயலாளர்.*

## உபதலைவர்கள்

**ஞானமுத்து செபமாலை மரியநாயகம்.** *பிறந்த நாள் 26-8-1942 பிரபல வர்த்தகர். தலைவர், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திசபை.*





**செல்வராசா செபமணி**
பிறந்த நாள் 14-3-1947 சமாதான நீதவான், முல்லைத்தீவு திடீர் மரண விசாரணை அதிகாரி. முல்லைத்தீவு மீனவர் கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவர். முல்லைத் தீவு மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர்.

**கிருஷ்ணபிள்ளை தியாகராஜா** பிறந்த நாள் 29-8-1943 சமாதான நீதவான்,முள்ளியவளை திடீர் மரண விசாரணை அதிகாரி பெரிய இத்திமடு பயிர்ச்செய்கைக்குழு முன்னாள் செயலாளர். கிராமமுன்னேற்றச்சங்க முன்னாள் செயலாளர். முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர்.

**J. F. சேவியர் ஜெயசீலன்** சமாதான நீதவன். சிங்கர் ஸ்தாபன மாங்குள முகவர். முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர்.


**காசிப்பிள்ளை தம்பாபிள்ளை**
வயது 52 சமாதான நீதவான் பயிற்றப்பட்ட ஆசிரியர், முன்னாள் கிராம சேவையாளர், கிராம அபிவிருத்திசங்க தலைவர், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி சபை முன்னாள் உறுப்பினர்.



**பொன் சந்திர சேகர்** வயது 55. நெடுங்கேணி மகா வித்தியாலய முன்னாள் அதிபர். நெடுங்கேணி கம நல சேவை முன்னாள் தலைவர். வவுனியா வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவர்.

**சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை**
**(புனைபெயர் முல்லைமணி)**
*(விபரங்களுக்கு 10-ம் பக்கம் பார்க்க)*

## செயலாளர்



**விசுவலிங்கம் சிங்கார வேலு** பிறந்தநாள் *14-3-1940* இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர். முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர். தலைவர் முல்லைக்கலைஞர் ஒன்றியம். அறுபதாம் ஆண்டுகளில் சிறுகதைகள், கட்டுரைகள் எழுதியுள்ளார். வானொலி நடிகராகவும், மேடைநடிகராகவும் நடித்தவர். மஹாகவி, முருகையன் போன்ற பிரபல கவிஞர்களுடன் நெருங்கிய இயக்கியத் தொடர்புடையவர். செயற்குழுச் செயலாளர்.

## உப செயலாளர்



**காங்கேசு அந்தோனி முத்து அற்புதராஜா.** வயது 34. பனை அபிவிருத்திச் சபை இணைப்பு உத்தியோகத்தர். நாடக நடிகர், மேடைப் பேச்சாளர், முல்லைக் கலைஞர் ஒன்றிய இணைச் செயலாளர், முல்லைக் கலைவட்ட செயற்குழு உறுப்பினர். முல்லைத்தீவு மாவட்ட தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்க தலைவர்,

## பொருளாளர்

**சிதம்பரப்பிள்ளை இரகுநாதப்பிள்ளை** பிறந்த நாள் 09-01-1943. முல்லைத்தீவு கச்சேரி காரியாலய உதவியாளர்.

# பார்வையாளர்கள்

இ. ச. சபாரத்தினம், ஜே.பி. 'சித்தம்' தெல்லிப்பழை
பொ. கணேசரத்தினம், 2-ம் ஒழுங்கை, பிறவுண்றோட், யாழ்ப்பாணம்
திருமதி முல்லை சுப்பிரமணியம், ஒட்டுசுட்டான்
திரு. சிவசுந்தரம், 4-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
ஏ. தேவராஜன், புலோலி மேற்கு, பருத்தித்துறை.
எஸ். திருச்செல்வம், கொழும்பு.
கோப்பாய் பிரதேச சபை தலைவர் எஸ். லோகேஸ்வரன்.
கோப்பாய் உதவி அரசாங்க அதிபர்.
செம்மலை வித்தியாலய ஆசிரியர்கள்.
எஸ். ராஜா பி.ஏ. செம்மலை
ஏ. சி. பரின் பிரதானவீதி, முல்லைத்தீவு
எஸ். விமலதாஸ் சென் மேரிஸ் வீதி, முல்லைத்தீவு.
ஏ. கீர்தபொன்ராசா, வண்ணாங்குள வீதி, முல்லைத்தீவு.
வை. எம். உவைஸ், பிரதானவீதி, முல்லைத்தீவு.
ஏ. மஃறுப், பிரதானவீதி, முல்லைத்தீவு.
எஸ். நவாஸ், பிரதானவீதி, முல்லைத்தீவு.
திருமதி. இ. துரைரத்தினம், கச்சேரி, முல்லைத்தீவு.
செல்வி. வ. மகிந்தினி, மகாவித்தியாலயம், முல்லைத்தீவு.
செல்வி. ம. ஞானேஸ்வரி
செல்வி. ஆ. பாலசிங்கம், தண்ணீரூற்று, முள்ளியவளை.
திருமதி. புவனா ஐயம்பிள்ளை, முள்ளியவளை.
செல்வி. இராசலட்சுமி சுப்பிரமணியம், மாமூலை, முள்ளியவளை.
செல்வி. கமலநாயகி கந்தையா, முள்ளியவளை.
எம். கே. பொன்னுத்துரை, 11 பி, டுருக்கெமுனு தெரு, தெகிவளை.
ஏ. சதுக்கீன், வண்ணாங்குள வீதி, முல்லைத்தீவு.
வி. ரி. ரணசிங்கம், 111 பி. டுருக்கெமுனு தெரு, தெகிவளை.
உ. நஜீப், வண்ணாங்குளம் வீதி, முல்லைத்தீவு.
ச. மகரூப், முஸ்லீம் பாடசாலை வீதி, முல்லைத்தீவு.
மா. பௌசூல்கக், செல்வபுரம், முல்லைத்தீவு.
இ. மக்பூல், வண்ணாங்குள வீதி, முல்லைத்தீவு.
செ. முஸ்மில், வண்ணாங்குள வீதி, முல்லைத்தீவு.
க. கதிரவேலு, செம்மலை.
பொ. புத்திசிகாமணி, முல்லைத்தீவு.
அ. ராசீக், முல்லைத்தீவு.
மு. சைபூள் இல்லாம், முல்லைத்தீவு.

சு. யோகநாதன்.
க. கனகசீலன்.
பொ. சேதுபதி, முல்லைத்தீவு.
சி. தெய்வேந்திரம்பிள்ளை (ப.செ.உத்தியோகத்தர்) கொக்கிளாய்
அ. இருதயநாதர், னராச பவனம்' வண்ணாங்குளம், முல்லைத்தீவு
அ. மரியராசா' ம ற்குடியிருப்பு, முல்லைத்தீவு.
திருமதி. த. கதிரவேலு, செம்மலை ம.வி., அளம்பில்.
திரு. ச. தங்கராசா, செம்மலை ம.வி. அளம்பில்.
திரு. சி. கனகசபை, செம்மலை ம.வி. அளம்பில்.
சி. சரவணபவானந்தன், செம்மலை ம.வி, அளம்பில்
செ. இரத்தினம், செம்மலை, அளம்பில்.
சி. பிரான்சிஸ், சிலாவத்தை, முல்லைத்தீவு.
சி. ஞானப்பிரகாசம், சிலாவத்தை, முல்லைத்தீவு.
ந. அருணாசலம், செம்மலை, அளம்பில்.
வ. சு. ஸ்ரீஸ்கந்தராசா (யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைத்தலைவர்
வ. செல்வராஜா (வரலாற்றுத்துறை)
சி. சிவஞானம் (இந்துமன்ற உறுப்பினர்)
கே. கிருபைநாதன் (கலைப்பீடம்)
சி. மோகனராஜா (கலைப்பீடம்)
எஸ். வசந்தி (கலைப்பீடம்)
சிவமணி (கலைப்பீடம்)
எஸ். எஸ். புஷ்பராஜா (வணிக மாணவர் மன்ற உறுப்பினர்)
மல்லிகா (கலைப்பீடம்)
வனஜா (கலைப்பீடம்)
எம். இராஜமலர் (கலைப்பீடம்)
ரி. கேசவன் (மாணவர் அவை உறுப்பினர்)
யோ. கிறிஸ்ரோபர்
பொ. சத்தியகீர்த்தி
பா. ஜீவரட்ணம்
க. முத்துலிங்கம்
கோபாலகிருஸ்ணன்
க. நாகரத்தினம்
இரவீந்திரன்
அமுதலிங்கம்
க. சிவராஜா
என். சுலோசனு
செல்வி என். பரராஜசிங்கம்
செல்வி ஏ. சுப்பையா
,, பி. வளர்மதி
,, ஏ. தேவசேனு

EVELYN RUTNAM LIBRARY
336

,, இ. கமலாம்பிகை
,, பி. சிவத்திரை
,, ஏ. அரசரட்ணம்
,, கே. முருகதாஸ்
,, கே. மோகனா
,, ஏ. பொன்மலர்
,, எஸ். சத்தியவதி
தனபாலசிங்கம்
எஸ். கே. மகேந்திரன்
பி. சிவானந்தசோதி
எஸ். அருள்நேசன்
ஆர். நந்தகுமார்
சி. எஸ். ஆனந்தம்
கே. தேவசாந்தன்
எஸ். சிவஞானம்
கே. தனேஸ்வரன்
எஸ். அருந்தவநாதன்
கே. கருணாகரன்
செ. பாலச்சந்திரன்

புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்